2024 பிப்ரவரி 13]

முற்பகல் 10–30

மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள் கேட்டுகொண்டதைப்போல, 13 திட்டங்கள் ஆய்வில் உள்ளன. அதன் திட்ட மதிப்பீடு 19,910 கோடி ரூபாயாக இருக்கிறது. ஒரு கோடி மக்கள் பயன்பெறுகிற வகையில் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சி ஏற்பட்ட 3 ஆண்டு காலத்தில், 4 கோடியே 53 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது மேலும், 2 கோடி மக்கள் பயன்பெறுகிற வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தத் திட்டங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

பள்ளிக்குப் புதிய கட்டடம்

***51218—திரு. செ. முருகேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஊராட்சி ஒன்றியம், சத்திரகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) போகலூர் ஊராட்சி ஒன்றியம், போகலூர் ஊராட்சி, சத்திரக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், 76 மாணவர்களுக்கு 3 பள்ளிக் கட்டடங்களில்

6 வகுப்பறைகள் இருக்கின்றன. தற்போதுள்ள கட்டட வசதி பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்குப் போதுமானதாக இருக்கிறது. ஆனால், பள்ளிக்கூடம் ஓட்டு கட்டடத்தில் ஒரு வகுப்பறையும், concrete கட்டடத்தில் Ground+1 மேல் தள வகுப்பறையும், மொத்தம் 2 வகுப்பறைகள் வட்டாரக் கல்வி அலுவலகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் 2 வகுப்பறைகளையும் பள்ளி மாணவர்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், வட்டாரக் கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சத்திரக்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.

திரு. செ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி, போகலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதியதாக ஒரு வகுப்பறை கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டிற்கு ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் வகுப்பறைகள் கட்டுவதற்காக 800 கோடி ரூபாயும், அதேபோல் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் 209 கோடி ரூபாய் மதிப்பில் 1,200 வகுப்பறைகளும், உயர்நிலை, மேல்நிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகளுக்கு என கிட்டத்தட்ட 1,050 கோடி ரூபாயும் ஓராண்டில் வகுப்பறைகள் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பணிகளில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பணிகள் முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடங்கள் எல்லாம் பழுது நீக்கப்பட்டு 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்களில்

2024 பிப்ரவரி 13]

பழுது நீக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுக் காலத்தில் மட்டும் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளெல்லாம் புதிய கட்டடங்களாகப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, சத்திரக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 76 தான் இருக்கிறது; 6 வகுப்பறைகள் இருக்கின்றன; அப்பள்ளியிலுள்ள 2 வகுப்பறைகளை வட்டாரக் கல்வி அலுவலர் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். வட்டாரக் கல்வி அலுவலர் வேறு இடத்திற்குப் போகும்பட்சத்தில் நிச்சயமாக கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படாது. அவர்கள் தொடர்ந்து வகுப்பறைகளைப் பயன்படுத்தி வருகின்றபட்சத்தில், நிச்சயம் ஒரு வகுப்பறை கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.*

திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமக்குடி தொகுதி, உரப்புளி கிராமத்தில் உள்ள ஒரு நடுநிலைப் பள்ளி கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அந்தப் பள்ளி ஓட்டுக் கட்டடத்தில் அமைந்துள்ளது. அக்கட்டடம் தரையைவிட 3 அடி பள்ளத்தில் அமைந்துள்ளது. 'இந்தக் கட்டடத்தில் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு எங்களுக்குப் பயமாக இருக்கிறது' என்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். உடனடியாக உரப்புளி ஒன்றியத்தில் ஓர் அரசு நடுநிலைப் பள்ளியைக் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லாத காரணத்தால் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பழுதடைந்த ஏறத்தாழ 13 ஆயிரம் வகுப்பறைகளெல்லாம் நம்முடைய அரசு பொறுப்பேற்ற பின்னால், மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 6 ஆயிரம் வகுப்பறைகளில் 4 ஆயிரம் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இன்னும் ஒரு மாதம் அல்லது இரண்டு*

மாத காலங்களில் மீதம் இருப்பவையும் கட்டி முடிக்கப்படும். அதுபோக, ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் இடிக்கப்பட்ட 13 ஆயிரம் கட்டடங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டமும் இருக்கிறது. கண்டிப்பாக அதற்கான ஆணைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை சட்டப்பேரவைத் தொகுதியில் 40 ஆண்டுகளுக்கு மேலான பல ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கட்டடங்களும், நடுநிலைப் பள்ளி கட்டடங்களும் பழுதடைந்திருக்கின்றன. குறிப்பாக, கந்தர்வகோட்டை ஊராட்சி, பழைய கந்தர்வகோட்டை ஊராட்சி, புனல்குளம் ஊராட்சி ஆகியவற்றில் உடனடியாக பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டிய தேவையிருக்கிறது. ஆகவே, 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பழுதடைந்திருக்கின்ற பள்ளிக் கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டு, புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தில் ஆலத்தூர்நாடு ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி தரமுயர்த்தப்பட்டுள்ளது. அப்பள்ளியில் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக

2024 பிப்ரவரி 13]

உள்ளது; மாணவர்களெல்லாம் தற்போது தரையிலே அமர்ந்து படிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, தரமுயர்த்தப்பட்டிருக்கிற அந்தப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 7,200 வகுப்பறைகள் கட்டுவதற்கு 1,050 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தரமுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரமுயர்த்தப்பட்ட பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் வைக்கின்றபொழுது, அவர்கள் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஊராட்சிகளின் எண்ணிக்கை 95; பேரூராட்சிகளின் எண்ணிக்கை 53. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவெனில், அங்குள்ள 25 ஊராட்சிகள் பேரூராட்சிகளுடன் இணைக்கப்படவிருப்பதாக அரசிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. இதுசம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதனை வலியுறுத்தி ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும்*

[2024 பிப்ரவரி 13

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலை அளிப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளையும், மாநகராட்சியுடன் ஊராட்சிகளையும் இணைப்பதைப் பொறுத்தவரையில், மாநகராட்சிகளாக மாற்றப்படுகின்றபோது எந்தெந்த ஊராட்சிகளை இணைக்கலாம் என்பது குறித்தெல்லாம் கடந்த காலத்தில் தீர்மானங்கள் போடப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதுசம்பந்தமாக ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து அக்குழு நிச்சயமாக விரைவில் முடிவு செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் அவருடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே.என். நேரு: இல்லை, இல்லை. சேர்க்காமலெல்லாம் இருக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, எந்தெந்த மாநகராட்சி மற்றும் நகராட்சியுடன், அதன் அருகிலிருக்கிற எந்தெந்த ஊராட்சிகளை இணைக்கலாம் என்பது குறித்து தீர்மானம் போடப்பட்டு, சம்பந்தப்பட்ட தலைவர் அவர்களின் ஒப்புதலோடுதான் அவை இணைக்கப்படும். இதற்காக சம்பந்தப்பட்ட துறையினுடைய செயலாளர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்; தூத்துக்குடிக்கு அருகிலிருக்கிற மாப்பிள்ளையூரணி என்ற ஊர் 45,000 மக்கள்தொகை கொண்டதாகும். அதை மாநகராட்சியோடு இணைப்பதைத்தவிர, வேறு வழியில்லை; இணைக்க வேண்டும். ஊராட்சியை மாநகராட்சியுடன் இணைத்தால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், 100 நாட்கள் பணிகள் கிடைக்காது என்ற காரணத்தால், அவற்றை இணைக்க அப்பகுதியிலுள்ள உள்ளாட்சித் தலைவர்கள் ஒப்புதல் தருவதில்லை.

2024 பிப்ரவரி 13]

அதேபோன்று, தாம்பரம் நகராட்சியை எடுத்துக்கொண்டால், அந்நகராட்சியில் அரசாங்கத்தினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்குக்கூட இடம் இல்லை. ஆனால், மாநகராட்சியின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது; மாநகராட்சி சாலையிருக்கிறது. அருகில் ஊராட்சி வருகிறபோது, அந்த வசதி வராது என்ற காரணத்தால், மக்கள் சிலர் மாநகராட்சியோடு ஊராட்சியை இணைக்க வேண்டும் என்று அவர்களாகவே விரும்புகிறார்கள். எனவே, இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தலைவர்களின் பதவிக் காலம் முடிகிற வரை அவை இணைக்கப்படாது; ஆய்வு செய்யப்படும்; பொதுமக்களிடம் கருத்து கேட்கப்படும். பொது மக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, எந்தெந்த ஊராட்சிகள் இணைக்கப்பட வேண்டுமோ அவற்றை மட்டும்தான் இணைக்க முடியுமேதவிர, எடுத்தவுடன், இந்த ஊராட்சி, அந்த ஊராட்சி என 25 ஊராட்சிகளையெல்லாம் இணைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தை எழுதிக் கொடுங்கள்; பதிவு செய்துகொள்ளலாம்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய கருத்தை பிறகு எழுதிக் கொடுங்கள்; பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைப்பது குறித்துதான் என்னுடைய கேள்வி. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே அமைப்புதான். மாநகராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், நகராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், பேரூராட்சிக்கு அருகில் இருக்கின்ற இடமாக இருந்தாலும், ஒரேமாதிரியான நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது. மக்கள்தொகைக்கேற்ப, ஊராட்சியில் 5,000–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை இருந்தால், ஊராட்சியைப் பிரிக்கிறார்கள். அதுபோல் இருக்கின்ற எல்லா இனங்களுக்கும் ஒரே பதில்தான்; அருகில் இருக்கின்ற இடமாக இருந்தால் அதனை இணைக்கலாம்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். சென்னையருகில் இருக்கிற 15,000 குடியிருப்புகள் இருக்கிற பகுதிகள், ஊராட்சிப் பகுதிகளில் இருக்கின்றன; ரூ.100 கோடிக்கு மேல் வைப்பு நிதி இருக்கிறது. அதனைக் கையாளக்கூடிய திறமை வாய்ந்த அதிகாரிகள் அல்லது பொறியாளர்கள் அங்கு இல்லை. ஆக, அந்தப் பகுதியை மாநகராட்சியுடன் இணைக்கின்றபோதுதான், அந்தத் தொகை ஒழுங்காகக் கையாளப்படும். அதேபோல், “அருகில் இருக்கிற மாநகராட்சிகள், நகராட்சிகளில் செயல்படுத்துகின்ற திட்டங்களை எங்களுக்கு ஏன் செய்யவில்லை” என்று அப்பகுதி மக்கள் கேட்கிறார்கள். அதனால்தான் அவை இணைக்கப்பட வேண்டுமேதவிர, பேரூராட்சியாக இருந்தாலும் வேண்டுமென்றே இணைக்கப்படுவதில்லை.

திண்டுக்கல் மாவட்டத்தில், ஊராட்சிப் பகுதியில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமையப் பெற்றிருக்கிறது. அங்கே 24 மணி நேரமும் குடி தண்ணீர் தேவைப்படுகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அப்பகுதியை மாநகராட்சியோடு இணைக்கக்கூடிய எண்ணம் வந்திருக்கிறதேயொழிய, வேறொன்றுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2024 பிப்ரவரி 13]

4—

உயர்மட்டப் பாலம்

***50429—திரு. S. ஜெயக்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர்-சென்னை தேசிய நெடுஞ்சாலை, பெருந்துறை புறவழிச் சாலையில் காஞ்சிகோயில் பிரிவு, துடுப்பதி பிரிவு, பெத்தாம்பாளையம் பிரிவு மற்றும் விஜயமங்கலம் பிரிவு ஆகிய இடங்களில் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை-சென்னை தேசிய நெடுஞ்சாலை, பெருந்துறை புறவழிச்சாலையில், காஞ்சிகோயில் பிரிவு, துடுப்பதி பிரிவு ஆகிய இரண்டு இடங்களில் நுழைவுப் பாலம், Vehicular underpass அமைக்க, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. அதேபோல், பெத்தாம்பாளையம் பிரிவில் போதிய போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தால், நுழைவுப் பாலம் அமைக்கத் தேவை ஏற்படாத காரணத்தினால், அதனருகிலே உள்ள காஞ்சிகோயில் பிரிவில் அமையவிருக்கும் பாலத்தினை இணைக்கும் வகையில் service road, அதாவது, சேவைச் சாலை அமைப்பதற்கு பணிகள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன.

நான்காவதாக, விஜயமங்கலம் பிரிவு அருகில் ஏற்கெனவே பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தை இணைக்கின்ற வகையில் புதிய சேவைச் சாலை, Service Road ஒன்று அமைப்பதற்கு tender கோரப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பணிகளும் நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான்கு பிரச்சினைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 4 பிரச்சினைகளிலும் தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், அதற்கான முன்னெடுப்புப் பணிகள் எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.